# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.280/2022 | Village | : | வல்லம் |
| Prosecution witness | : | PW-5 | Taluk | : | தஞ்சாவூர் |
| Name | : | திரு.ரெங்கராஜ் | Occupation | : | கட்டிட ஒப்பந்தம் |
| Father Name | : | திரு. வீரசாமி | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.06.2026.**

A1 abated. A2 present. A3, A4 absent. U/s 355 BNSS filed and allowed.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் வல்லத்தில் வசித்து வருகிறேன். கட்டிட ஒப்பந்தகாரராக வேலை பார்த்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிற்கு எதிர்பக்கம் பிரான்சிஸ் வீடு உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு சத்தம் கேட்டது நானும் பக்கத்துவீட்டை சேர்ந்த ஆறுமுகம், செல்வம் ஆகியோர் ஓடி போய் பிரான்சிஸ் வீட்டில் பார்த்தோம். ஓடிபோய் பார்ப்பதற்குள் வெட்டியதாக சொல்லப்படும் நபர்கள் வண்டியை எடுத்துகொண்டு ஓடிவிட்டார்கள். பிரான்சிஸ்க்கு வெட்டுபட்டிருந்தது, அவருடைய மகனுக்கும் இரத்தகாயம் இருந்தது. ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அவர்களை தமக மருத்துவமனைக்கு அனுப்பினோம்.

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை போலிஸார் விசாரிக்கும்போது இரவு 10.30 மணியளவில் மரியபிரான்சிஸ் முன்பாக அலறல் சத்தம் கேட்டு போய் பார்க்க ரூபியும், அவருடன் வந்த மூன்று பேர்களும் ஒருவர் கையில் அரிவாளுடன் மற்றவர்கள் உருட்டுகட்டையுடன் ரூபி கொட்டகை பக்கம் போனார்கள் என்றும், மரியபிரான்சிஸ்க்கு தலை மற்றும் இடது கையில் வெட்டுபட்டு இரத்தம் சொட்ட சொட்ட இருந்தார் என்றும், டேவிட்டுக்கு இடதுதோள்பட்டையில் வெட்டுபட்டு இருந்தார் என்றும் அந்த மூன்று பேரும் மரியபிரான்சிஸ்சை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் ரூபி தலைமையில் பர்மாகாலனியை சேர்ந்த இரண்டுபேர் சேர்ந்து வந்து வெட்டியும், அடித்து விட்டு சென்றதாக

கேள்விபட்டேன் என்றும் பின்பு காயம் பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அனுப்பினோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு அதை சொல்லாமல் மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.06.23 18:48:45 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**